[2011 பிப்ரவரி 5

3—

உணவகம்

***97884—திருமதி பெ. கமலாம்பாள்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் பேருந்து நிலையத்தில் போக்குவரத்துத் துறை சார்பாக உணவகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பேருந்து நிலையங்களைப் போக்குவரத்துக் கழகங்கள் பராமரிப்பதில்லை. உள்ளாட்சித் துறையின்கீழ் உள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள்தான் பேருந்து நிலையங்களைப் பராமரிக்கின்றன. காஞ்சிபுரம் பேருந்து நிலையத்தினைப் பொறுத்தவரையில், உணவகம் அமைப்பது தொடர்பாக காஞ்சிபுரம் நகராட்சிதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே, காஞ்சிபுரம் பேருந்து நிலையத்தில், விழுப்புரம் போக்குவரத்துக் கழகம் சார்பாக உணவகம் அமைக்கத் திட்டமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உணவகத்துடன்கூடிய பேருந்து நிலையம் அமைக்கக்கோரி மானியக் கோரிக்கை விவாதத்திலும், மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலும் மற்றும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களிடத்திலும் நேரடியாகவும் கோரிக்கை வைத்தேன். ஏனென்றால், காஞ்சிபுரம் கோயில்கள் நிறைந்த சுற்றுலாத் தலமாகவும், பட்டுச் சேலைகள் எடுக்க வெளி மாநிலங்களிலிருந்து அதிக அளவில் மக்கள் வருவதாலும், காஞ்சிபுரத்தைச் சுற்றி தொழிற்சாலைகள் நிறைந்திருப்பதாலும், தொழிலாளர்கள் அதிக அளவில் வசிப்பதாலும், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு விபத்துகளும், உயிர் இழப்புகளும் அடிக்கடி

2011 பிப்ரவரி 5]

ஏற்படுவதாலும் உணவகத்துடன்கூடிய புறநகர் பேருந்து நிலையத்தை பொன்னேரிக்கரையில் அமைப்பதற்கானப் பணிகள் முடிவுற்ற நிலையில், ஒரு சில நிபந்தனைகளால் தடை ஏற்பட்டு மாற்று இடத்தில் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு முடிவுற்ற நிலையிலுள்ளது. ஆகவே, கேட்டதைக் கொடுக்கும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அவசர, அவசியம் கருதி விரைவில் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துகள் அப்படியே உள்ளாட்சித் துறை பொறுப்பை வைத்துள்ள மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தற்போது போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையினையடுத்து ஊதிய உயர்வினை அறிவித்தார்கள். ஆனால், அறிவிக்கப்பட்ட ஊதிய உயர்வு போதாது என்று குறிப்பிட்ட ஒருசில தொழிற்சங்கங்களைச் சார்ந்தவர்கள் வேலை நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்திருந்தாலும்கூட பெரும்பான்மையான தொழிலாளர்கள் மிகுந்த பயன் அடைந்திருப்பதாகத் தகவல்கள் வந்திருக்கின்றன. இந்தப் பேச்சுவார்த்தையின்மூலம் ஒவ்வொரு தொழிலாளியும் எவ்வளவு ஊதியம் பெற்றிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க முன்வருவார்களா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊதிய ஒப்பந்தம் 2010-ன் பணப் பலன் சென்னையில் பணியாற்றுபவர்களுக்கு ரூ.2,000/-லிருந்து அதிகபட்சமாக ரூ.4,135/- என்று அறிவித்ததை மீண்டும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உயர்த்தி 552 கோடி ரூபாயை வழங்கி, சென்னையில் பணியாற்றுபவர்களுக்கு அதிகபட்சம் ரூ.7,113.40 என்ற அளவிலே கூடுதலாக உயர்வு வந்திருக்கிறது. ரூ.2,000/-ல் ஆரம்பித்து அதிகபட்ச உயர்வாக ரூ.7,113.40 வரை வந்திருக்கிறது. இரண்டு வருடங்கள் நடத்துனர் பணி புரிந்திருந்தால் அவருக்கு அதிகபட்சமாக ரூ.2,387.45-ம், 13 வருடங்கள் பணிபுரிந்திருந்தால் அவருக்கு ரூ.3548.80-ம் 21 வருடங்கள் பணிபுரிந்திருந்தால் ரூ.4,266.35-ம், 29 வருடங்கள் பணிபுரிந்திருந்தால் ரூ.4448.80-ம், 32 வருடங்கள் பணிபுரிந்திருந்தால் ரூ.8,193-ம் என்றும் ஊதிய உயர்வு வழங்கப்பட்டு இருக்கின்றது. இதே முறையிலேதான் அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் அறிவிக்கை தரப்பட்டு இருக்கிறது. ஆனால், வேண்டுமென்றே அரசியலுக்காக ஒருசில சங்கங்கள் எங்களுக்கு ஊதிய உயர்வு, பணப் பலன் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். ஒவ்வொரு தொழிலாளருக்கும் விவரமாக இதுபோன்ற அறிவிக்கை அனுப்பப்பட்டு இருக்கிறது.

முற்பகல் 9-45

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் அவைக்குள் வந்தபோது உறுப்பினர்கள் மேசையைத் தட்டி வரவேற்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வசிக்கின்ற மறைமலை நகர் நகராட்சி, திருப்போரூர் தொகுதியிலுள்ளது. இங்கு சுமார் 75,000 மக்கள் வசித்துவருகிறார்கள். மறைமலை நகர் நகராட்சிப் பகுதிக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் திட்டத்தின்மூலம் அதிக அளவில் மாநகரப் பேருந்துகளை விட்டதற்குத் தொகுதி மக்களின் சார்பாக

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 5]

நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மறைமலை நகர் பகுதியிலே ரூபாய் இரண்டரை கோடி மதிப்பீட்டிலே புதியதாகப் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் பேருந்து நிலையம் எப்போது திறக்கப்படும்? அதேபோன்று, மறைமலை நகரிலிருந்து காஞ்சிபுரம் செல்வதற்கு 3 பேருந்துகள் மாறிச் செல்லவேண்டியிருக்கிறது. எனவே, மறைமலை நகரிலிருந்து நேரடியாக காஞ்சிபுரம் செல்வதற்குப் பேருந்து இயக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய பேருந்து நிலையம் திறப்பதைப் பற்றி இங்கே கேட்டிருக்கிறார்கள். உள்ளாட்சித் துறையின் மூலமாகத்தான் அது முடிவு செய்யப்படும். திருப்போரூரிலிருந்து நேரடியாக காஞ்சிபுரத்திற்குப் பேருந்து வேண்டுமென்றால் உடனடியாக ஆய்வு செய்து பேருந்தை விட முடியுமானால் விடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.*

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரிலே இருக்கின்ற போக்குவரத்து நெரிசல் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வருகிறது. சென்னை மாநகரத்திற்குள் mini bus இயக்குவது குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்த அவையிலே அறிவித்தார்கள். Mini bus இயக்குவதுமீதான வழக்கில் நேற்று நீதிமன்றத்திலே தடை வாபஸ் பெறப்பட்டிருக்கிறது என்று நான் நினைக்கின்றேன். அந்தவகையிலே, மேற்கொண்டு சென்னை மாநகரத்திற்குத் தேவையான mini bus சேவையினை அளிப்பதற்கு அரசு முன்வருமா என்பதனைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை உயர் நீதிமன்றக் கிளையில், mini bus குறித்த

[2011 பிப்ரவரி 5

வழக்கில் தடையாணை பெற்றிருந்ததை நேற்று விலக்கியிருக்கிறார்கள். அதனுடைய நகல் இதுவரை அரசுக்குக் கிடைக்கவில்லை. கிடைத்தவுடன் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி எவ்வளவு விரைவாகப் பேருந்துகளை விடுவதற்கு முயற்சிகள் எடுக்க முடியுமோ, அவ்வளவு விரைவாக எடுக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னையைப் பொறுத்தவரையில், mini bus விடுவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. புதிய வண்டிகள் வாங்கப்பட்டிருக்கின்றன. அவற்றுக்கு விரைவிலே கூடு கட்டி சென்னையில் வண்டிகள் விடப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்திலிருந்து தருமபுரி செல்லும் வழியில் இருக்கிற தொப்பூரிலே அரசு சார்பாக ஒரு உணவகம் கட்டப்பட்டு நீண்டகாலமாக இயங்காமல் இருக்கிறது. அதற்கான கட்டடமும், போதிய இடமும் தகுந்த நிலையிலே இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த உணவகத்தை மீண்டும் இயக்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்த இடத்தைப் பார்வையிட்டு, உணவகங்கள் நடத்தியவர்கள் நஷ்டம் வருகிறது என்ற காரணத்தினால் தொடர்ந்து டெண்டர் எடுக்கவில்லை. இலாபகரமாக இருக்குமானால் அதை அரசு நடத்துவதிலே சிரமம் இருக்காது, டெண்டர் விடுவதில் எந்தவிதமான தாமதமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க ஊதிய உயர்வு ஒப்பந்தத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின்மூலம் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்

2011 பிப்ரவரி 5]

அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். 40 ஆண்டுகாலம் தொழிற்சங்கத்தில் பணியாற்றியவன் என்ற முறையில், போக்குவரத்துத் துறையில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கு இந்த அளவு அதிகபட்சமான பணப் பயனோ, பதவி உயர்வோ கிடைக்கிற ஒப்பந்தம் இதுவரையில் உருவாக்கப்படவில்லை. என்று தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தொழிலாளர்களின்மீது உள்ளபடியே மிகுந்த அன்பு கொண்டு, அவர்களுடைய பாதுகாவலராக விளங்கி, வரலாற்றுச் சிறப்புமிக்க ஓர் ஒப்பந்தத்தை உருவாக்கி போக்குவரத்துத் தொழிலாளர்கள் அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அதற்கு பெருமுயற்சி எடுத்துக்கொண்ட மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் போக்குவரத்துத் துறை தொழிலாளர்களின் சார்பிலே மனப்பூர்வமான நன்றியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9–50

நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு சிறிய விண்ணப்பம். கோத்தகிரியிலிருந்து கேரளாவிற்குச் செல்வதற்காகப் புதிய வழித்தடங்களில் சில பேருந்துகளை இயக்க அந்தப் பகுதி மக்கள் கேட்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் எவ்வளவோ வழித்தடங்களில் பேருந்துகளை இயக்கித் தந்திருக்கிறார்கள். ஒருவேளை கேரளாவிற்குள் செல்வதற்கு வாய்ப்பில்லையென்றால், கோத்தகிரியிலிருந்து வாளையார் எல்லை வரையிலாவது செல்வதற்கு இந்தக் கோரிக்கையை ஏற்று, நிறைவேற்றித் தருவார்களா என்று கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்டை மாநிலங்களோடு ஒரு புதிய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, நம்முடைய ஆட்சியில் 6,400 கிலோ மீட்டர் வரையில் கேரள மாநிலத்தில் நமது பேருந்துகள் செல்லலாம் என்று அவர்களும் ஏற்றுக்கொண்டு, அவர்களுடைய பேருந்துகளை நம்முடைய மாநிலத்தில் 6,400 கிலோ மீட்டர் தூரம் வரை இயக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டு, அது நடைமுறையில் இருந்து கொண்டு வருகின்றது. எனவே, மேற்கொண்டு கேரள

மாநிலத்திற்குப் பேருந்துகளை விட வேண்டுமென்றால் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி, அனுமதி பெற்ற பிறகுதான் விட முடியும். எனவே, வாளையார் வரை பேருந்து விடுவதிலே எந்தவித ஆட்சேபனையும் இல்லை. வாளையார் வரை பேருந்துவிட ஆய்வு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

4—

ஆரம்ப சுகாதார நிலையம்

***65251—திருமதி ரா. லீமா றோஸ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவட்டாறு தொகுதி, பாரதப்பள்ளியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மத்திய அரசின் இலக்கின்படி இரண்டு சுகாதார மையங்களுக்கிடையே இடைவெளி குறைந்தபட்சம் 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், பாரதப்பள்ளி கிராமத்திற்கும் திருவட்டாறு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 4 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு ஊராட்சி ஒன்றியம், பாரதப்பள்ளி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், அவையில் இல்லை. மாற்றாக மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய துணை சுகாதார நிலையம் கட்டுவதற்கு எவ்வளவு தூரம் இடைவெளி வேண்டும்? இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இடையில் இடைவெளி 8 கிலோ மீட்டர் இருக்க வேண்டும். அதுபோல், கிளை துணை சுகாதார நிலையம் அமைக்க